★ பாஸ்போட், தேசிய அடையாள அட்டைப் படங்கள் ★ Enlargement, குறைந்தவிலையில் தரமாக, விரைவாகப் பெற நாட வேண்டிய இடம்

SARMILA
★ PHOTO ★
302, Point Pedro Road,

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-25

Nallur — Jaffna.
உயிரோவியமான கறுப்பு/வெள்ளை - கலர் உட்புற வெளிப்புற படப்பிடிப்பு செய்தல், பிலிம் ரோல் - அல்பம் விற்பனை


சர்மிளா போட்டோ

302, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ வருடம் ஆடி மீ 28 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 17 (13 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 22

அமைதிப் பணி செய்ய யாழ். வந்து

# கண்ணிவெடி மீட்கச்சென்ற இரு இந்திய வீரர்கள் பலி!



நேற்றைய கண்ணிவெடிச் சம்பவத்தில் உயிரிழந்த மேஜர் திலீப் சிங் (படம்: ஜெயம்)

## சிவன் பண்ணை வீதியில் நேற்றுக் காலை சம்பவம்

—அலுவலகச் செய்தியாளர்கள்: கே. இரத்தினராஜசிங்கம், சண். ஜோண்சன்—

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 13

நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை அகற்றும் வேலையில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவ உயரதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் கண்ணிவெடி ஒன்று வெடித்ததில் உயிரிழந்தனர். மற்றும் இரண்டு இந்திய இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் தொலைத் தொடர்பு திணைக்கள அலுவலகத்துக்கு அருகில் நேற்றுக்காலை 9 மணியளவில் இந்த வெடி விபத்துச் சம்பவம் இடம் பெற்றது.

எட்டாவது பொறியியல் படைப் பிரிவிற்குத் தலைமைதாங்கும் மேஜர் திலீப் சிங் (வயது 34), கனிஷ்ட ஆணை அதிகாரி மொகிந்தர் ராவ் (வயது 42) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

யாழ். கோட்டைமுனைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றும்வேலை நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

மேஜர் திலீப்சிங் தலைமையில் இருபதிற்கும் அதிகமான இந்திய வீரர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

காலையில் பூஜையை முடித்துக்கொண்டு, சந்தனம், குங்குமம் தரித்த பின்னர் குழுவினர் தமது வேலையை ஆரம்பித்தனர்.

யாழ் தொலைத்தொடர்பு அலுவலகக் கட்டடத்துக்கு அருகில்-சிவன் பண்ணை வீதிப் பக்கமாக அவர்கள் முன்னேறிய வேளையில் அங்கு புதை

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று துக்கம் அனுஷ்டிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக 13

நேற்று நடைபெற்ற கண்ணிவெடி விபத்தில் மரணமான இந்திய இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இன்று வியாழக்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இது தொடர்பாக யாழ் வர்த்தகர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில்—

ஈழம் வாழ் தமிழ்பேசும் மக்களின் துயர் துடைக்க வந்த இந்திய இராணுவ வீரர்கள் கண்ணிவெடி விபத்தில் அகால மரணமடைந்த செய்தி கேட்டு தமிழ் மக்கள் பெருந்துயர் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் ஆத்மா சாந்தியடைய இன்று சகல வர்த்தக நிலையங்களிலும், வாகனங்களிலும் அரைக் கம்பத்தில் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்குமாறும் கேட்கப்பட்டிருக்கிறது. (உ-7)

## அறிவித்தல்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை
காங்கேசன்துறை

சகல காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களுக்கும்

மேற்படி தொழிற்சாலையில் மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட விருப்பதால் தொழிற்சாலையில் கடமையாற்றும் சகல நிரந்தர ஊழியர்களும் 1987. 08. 14 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**சிமெந்து விற்பனை**

மேற்படி தொழிற்சாலையில் சிமெந்து விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்க திணைக்களங்கள், பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த ஏனையோர் வங்கிக் கட்டளைகளைக் [Bank Draft/Pay order] செலுத்தியே சிமெந்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத் தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

இங்ஙனம்
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்.
தொழிற்சாலை முகாமையாளர்
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன் துறை.

(1987.08.12)

## பிறப்பும் இறப்பும் யாழ் ஆஸ்பத்திரியில்!

நேற்றைய தினம் கண்ணி வெடியில் அகப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் மரணமான மேஜர் திலீப்சிங் யாழ் ஆஸ்பத்திரியிலேதான் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

34 வருடங்களுக்குமுன் யாழ்ப்பாணத்தில் இவரது தந்தை, தாய் இருந்த சமயம் யாழ் ஆஸ்பத்திரியில் இவர் பிறந்தார்.

தனது இரண்டாவது வயதில் குடும்பத்துடன் தூத்துக்குடி சென்று அவர் தமது 19 வயதில் இராணுவத்தில் சேர்ந்தவர்.

இவர் ஒரு பிள்ளையின் தந்தை. (உ-7-10)

## 4 இயக்கங்களின் கோரிக்கை

இடைக்கால நிர்வாகத்தில் சமமான பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என நான்கு தமிழ்ப் போராளி இயக்கங்கள் இந்திய அரசை வற்புறுத்தியுள்ளன.

ஈ பி. ஆர். எல். எப், டெலோ, புளொட், ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி ஆகிய இயக்கங்களே இக்கோரிக்கையை விடுத்துள்ளன.

## பாதுகாப்பு நிதி மூலம் செல்வச்சந்நிதி ஆலய புனரமைப்பு வேலை!

### அமைச்சர் அத்துலத் அறிவிப்பு

கொழும்பு, ஆக. 13

சேதமடைந்த தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தை புனரமைப்புச் செய்யும் வேலைகளுக்குத் தேவையான முழுப்பணத்தையும் பாதுகாப்பு நிதியில் இருந்து அளிக்கப் போவதாக அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்திருக்கிறார்.

அமைச்சர் இதனை கொழும்புச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வடபகுதிக் கதிர்காம

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கால்இழந்தார்

யாழ்ப்பணம், ஆக. 13

மண்டைதீவு கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பொறிவெடியினால் மீனவர் ஒருவர் தனது ஒரு காலை இழந்தார்.

யாழ்ப்பாணம் ராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த சந்தியா யோகராசா (வயது 25) என்பவரே. இவ்வாறு கண்ணி வெடியில் தனது காலை இழந்தவராவார். (உ-7-10)

ஆயுதங்களை ஒப்படைத்தாலும்

# மலையகத்தில் போராட்டம் தொடரும் என்கிறார் பாலகுமார்

— அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஆக. 13

வடக்கு, கிழக்கில் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டு முடிந்தாலும் மலையகத்தில் எமது ஆயுதப் போராட்டம் தொடர்ந்தே தீரும்,

ஈரோஸ் பிரமுகர் திரு வே. பாலகுமார் நேற்று இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதி மக்களின் பிரச்சினைகள் சிறிதளவு தீர்க்கப்பட்டாலும் மலையகப் பகுதி மக்களின் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை.

எனவே, நாம் வடக்கு கிழக்கில் ஆயுதங்களை ஒப்படைத்தாலும் மலையகப் பகுதியில அரசியல் ரீதியாக நாம் போராட்டம் நடத்துவோம்.

அதற்கு இலங்கை அரசு குந்தகம் விளைவிக்கும் பட்சத்தில் ஆயுத ரீதியாக எமது போராட்டம் தொடரும்.

**ஆயுதம் ஒப்படைப்பு**

வடக்கு, கிழக்கில் ஆயுதங்களை ஒப்படைப்பது சம்பந்தமாகத் திரு பாலகுமாரிடம் கேட்டதற்கு அவர் பின்வருமாறு தெரிவித்தார்:—

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை தாம் எப்படியும் நிறைவேற்றியே தீரப்போவதாக இந்திய அரசு நிச்சயப்படுத்திக் கூறியது.

அதன்பின்னர் தமிழ்ப் பகுதிகளுக்கு இந்திய அமைதிப் படையினரும் அனுப்பப்பட்டனர்.

அமைதிப் படையினர் இங்கு வந்த பின்னரும் நாம் ஆயுதங்களை ஒப்படைக்காவிடில் அதனால் உருவாகக்கூடிய சம்பவங்களுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே ஆயுதங்களை ஒப்படைக்கச் சம்மதித்தோம்-என்றார்.

## தொலைத் தொடர்பு விரைவில் கிடைக்கும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான தொலைபேசித் தொடர்பு வசதிகள் விரைவில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான திருத்த வேலைகளை ஆரம்பிக்க தொலைத் தொடர்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையங்களுக்கு ஏற்பட்ட சேதம் சுமார் 41 கோடி 50 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-எ)

## கதறி அழுத சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஆக. 13

கண்ணிவெடியில் சிக்கி, இந்திய இராணுவ வீரர் ஒருவர் மரணமானதை அடுத்து யாழ் ஆஸ்பத்திரி அழுகுரலால் அதிர்ந்தது.

இச் சம்பவத்தின்போது மயிரிழையில் உயிர் தப்பிய ஏனைய சிப்பாய்களே யாழ் ஆஸ்பத்திரியில் நின்று கத்திக் கதறி அழுதனர்.

அழுத பல சிப்பாய்கள் மயங்கியும் வீழ்ந்தனர்.

சிப்பாய்களின் கதறலைக் கண்ட பொது மக்கள் சிலரும் கண்கலங்கியதைக் காண முடிந்தது.

நேற்று நூற்றுக்கணக்கான இந்திய சிப்பாய்களும், ஜீப் வண்டிகளும் யாழ் ஆஸ்பத்திரியை முற்றுகையிட்டிருந்தன. (உ-10)

## ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகர்கள் வந்தனர்

யாழ்ப்பாணம், ஆக 13

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்த சில முக்கிய பிரமுகர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

விசேட விமானம் மூலம் பலாலிக்கு வந்தடைந்த இவர்கள் பின்னர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

வரதராஜப் பெருமாள், கிருபா ஆகிய பிரமுகர்களும் நேற்று வந்து சேர்ந்தனர்.

தொடர்ந்து ஏனைய அமைப்புகளைச் சேர்ந்தோர் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணம் வந்து சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

## சுபநேரம்

13-8-1987
வியாழக்கிழமை

சுபநேரம்:-
7 35 முதல் 9.05 வரை

ராகுகாலம்:-
1 35 முதல் 3.05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## ஈரோஸ் நாளை ஆயுத ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 13

நாளையும் மறுதினம் சனிக்கிழமையும் ஈரோஸ் இயக்கம் ஆயுதங்களை ஒப்படைக்கவுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியிலும் மட்டக்களப்புப் பகுதியிலும் இந்த ஆயுத ஒப்படைப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மட்டக்களப்பில் ஆயுத ஒப்படைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக ஈரோஸ் பிரமுகர், திரு. சங்கர் இன்று மட்டக்களப்பு பயணமாகிறார். (உ-10)

### முச்சந்தி முரளி




அமைதி காக்க வந்து தங்கள் உயிர்களைத் துறந்த இந்தியப் படையினருக்கு என்னை கண்ணீர் அஞ்சலிகள் உரித்தாகுக.

## பிக்குகளிடம் ஆயுதம்

கொழும்பு, ஆக. 13

பௌத்த பிக்குகள் தங்கியிருந்தஇடம் ஒன்று களனி பொலீஸ் பிரிவில் சோதனையிடப்பட்டது.

அங்கிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதுடன் மூன்று பிக்குகளும் கைது செய்யப்பட்டனர். (உ-எ)



நேற்றைய சம்பவத்தில் மரணமான இந்திய இராணுவச் சிப்பாய் மொகிந்தர் ராவிற்கு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்படுவதை மேற்படத்திலும் இச்சம்பவத்தில் காயமடைந்து கவலைக்கிடமான நிலையில் இருக்கும் மற்றைய சிப்பாய் தயாளனை கீழே உள்ள படத்திலும் காணலாம். (படம்: ஜெயம்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

திருவாசகம் 112/- ஸ்ரீமத் பகவத்கீதை 98/- விளக்கியவர் ஸ்ரீ மத் சுவாமி சிற்பவானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவன வெளியீடு திருப்பராயத்துறை. விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

லக்ஷ்மி சிவசங்கரி, அனுராதா ரமணன், ரமணிசந்திரன், ராஜேஸ்குமார், கண்ணதாசன் அண்ணாதுரை மற்றும் பலரின் எழுத்தோவியங்கள் மர்ம மாயாஜால சமூக கதைகள் வார மாத சஞ்சிகைகள், புத்தகங்களை பெற ராஜன் புத்தகசாலை 12, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். பழைய சஞ்சிகைகள் மலிவு விலைகளில் (சில வாரங்களுக்கு மட்டும்) கிடைக்கும். (1501)

நல்லைநகர் நூல் யாழ்ப்பாண இராச்சியத்திலது நல்லூர் கந்தசுவாமி கோயிலினதும் வரலாறு கூறும் ஆய்வு நூல். சந்தையா குணராசா எம். ஏ. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். (1465)

**அறிவித்தல்**

ராஜன் புத்தகசாலை மீண்டும் தனது பழைய இடத்துக்கு இடம் மாறி விட்டது என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறோம். ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். சகல விதமான இலங்கை, இந்திய வார மாத சஞ்சிகைகளும் புத்தகங்களும் பெறலாம். (1458)

**சேவை**

உங்களின் வீடுகள் (HOUSES) கடைகள், ஸ்தாபனங்கள் மற்றும் கோவில்கள், விளம்பரப் பலகைகள் என்பன மிகச் சிறந்தமுறையில் நாகரிகத்திற்கு ஏற்ப பெயின்டிங்கோ பிறின்டிங்கோ செய்ய நாடவேண்டிய இடம்: அ. யோகேந்திரன், 40, யாழ்/இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். (1502)


# வடமராட்சி மாணவரின் கல்வி பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 13

வடமராட்சி மாணவர்களின் கல்வி நிலை இருள் சூழ்ந்ததாகக் காணப்படுகிறது.

இங்குள்ள பிரபல பாடசாலைகள் நான்கு. பெரும் அழிவுற்றிருப்பதே இதற்குக் காரணமாகும்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை என்பனவே அந்த நான்கு பாடசாலைகளும் ஆகும்.

இங்கு கல்வி பயின்று வந்த சுமார் 4 ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இதனால் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளனர்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள அதிகாரிகள் இது விஷயத்தில் மாற்று நடவடிக்கை எடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தளவு கூடிய எண்ணிக்கையைக் கொண்ட மாணவர்களை எப்படி சாதாரண கட்டடங்களை ஏற்பாடு செய்து கல்வி பயில வைக்க முடியும் என நிணைக்கள உயர் அதிகாரி ஒருவர் கவலையுடன் கேட்டார். (உ-ஓ)

## ஓய்வூதியம் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 13

வடபகுதி ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியம் இன்று வழங்கப்படும்.

இதேவேளை வடமராட்சிப் பகுதி ஓய்வூதியர்களுக்கான பற்றுச்சீட்டுக்கள் அவர்களின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது என்றும் –

அவர்கள் வழமையாக ஓய்வூதியம் பெறும் இடங்களுக்குச்சென்று அங்கு பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் –

யாழ் செயலக பொது சனத் தொடர்பு அதிகாரி திரு. ரி. குலசேகரம் தெரிவித்தார். (உ-ஓ)

# ஒப்பந்தத்தை அத்தபத்துவும் வரவேற்கின்றார்

கொழும்பு, ஆக. 13

ஒப்பந்தத்தில் கூறப்பட்ட படி இந்தியா நடந்து கொண்டால் எதற்கும் நாம் அஞ்சத்தேவையில்லை.

—இப்படி ஒப்பந்தத்தை வரவேற்று சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து தெரிவித்தார்.

இந்திய—இலங்கைஒப்பந்தம் பற்றி அமைச்சர் மேலும்சொன்னதாவது:

ஒப்பந்தம் ஓரளவு அமைதியைக் கொண்டு வந்துள்ளது.

வடக்கு—கிழக்கு இணைப்பை தொடரக் கூடியதாக சர்வசன வாக்கெடுப்பில் வெளியார் தலையீடு இடம் பெறும் சாத்தியம், இந்தியா ஒப்பந்தத்தை மதித்துச் செயல்படும் வரை இருக்காது என்று நம்பலாம்.

ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளபடி இந்தியா செயல்படும் வரை எனது ஆதரவு ஒப்பந்தத்துக்கு உண்டு.

—இப்படி அமைச்சர் அத்தபத்து தெரிவித்தார். (உ-எ)

## 30 பேர் விடுதலை!

திருகோணமலை, ஆக. 13

பெலவத்தை புனர்வாழ்வு முகாமில் இருந்து மேலும் முப்பது தமிழர் கடந்த மூன்றும் திகதி விடுவிக்கப்பட்டனர்.

பிரசைகள் குழுவின் பிரதிநிதி திரு. எஸ். ஆறுமுகம் கொழும்பு சென்று அனைவரையும் அழைத்து வந்து அவரவர் உறவினர்களிடம் ஒப்படைத்தார். (உ-எ-150)

## ஆசிரியர்களிடையே சிறுகதைப் போட்டி

ஆசிரியர்களிடையே சிறுகதை எழுதும் போட்டி ஒன்றை நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இச்சிறுகதைப் போட்டி நடத்தப்படும்.

போட்டி முடிவு திகதி எதிர்வரும் செப்டெம்பர் 30 ஆகும்.

ஆசிரியர்களிடையே ஆக்கும் திறனை வளர்க்கவே இப்போட்டி நடத்தப்படுகின்றது.

இப்போட்டி சம்பந்தமான விவரங்கள் கல்வி அமைச்சினால் பிராந்தியப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

சிறந்த சிறுகதைகளுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். (உ-எ)

# சமய சாதனைகளை கடைப்பிடிக்க வேண்டும்

## நல்லூரில் முத்தையா உரை

யாழ்ப்பாணம், ஆக. 13

சமய உண்மைகளைத் தெளிவு பெறுவதற்கும் இறைவனோடு ஐக்கியப்படுவதற்கும் சமய சாதனைகள் முக்கியமானவை. நாமஜெபம், தோத்திர பாராயணம், தியானம் என்பன சமய சாதனைகளில் சிலவாகும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் "கந்தர் அநுபூதி" தொடர் சொற்பொழிவு நடைபெற்றபோது வேதாந்த சாகரம் ஆத்மஜோதி நா. முத்தையா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது :-

பதினாறாயிரம் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதருக்கு இன்னும்பாட வேண்டும்; இன்னும் பாட வேண்டும் என்ற நா விரும்பியது.

"நான் மறக்கினும் செல்லும் நா நமச்சிவாயவே" என்று சொல்லிய சுந்தரருக்கு எவ்வளவு வைராக்கிய சிந்தை இருந்திருக்க வேண்டும்?

அருணகிரியார் முருகப் பெருமானிடம் பாடும் பணியேபணியாகஎனக்கு அருள வேண்டும் என்று கேட்கிறார். வேண்டுவார் வேண்டுவதை ஈபவனாகிய முருகப்பெருமான் திருவருளினால் பாடும் பணியே பணியாகக் கிடைத்தது.

பாடும் பணியைப் பெரிய பணியாகக் கொண்டு பெருமக்கள் தமிழ்கூறும் நல்லுலகத்தில் வாழ்ந்துள்ளார்கள்.

சம்பந்தர் முதலான சமயாசாரியர் நால்வரும் பன்னிரு ஆழ்வார்களும் பாடும் பணியே பணியாகக் கொண்டவர்கள்.

அருணகிரிநாதர்பாடும் பணியை வேண்டிப் பெற்றவர். அருணகிரிநாதரின் படைப்புகளுள் கடைசியாகத் திகழ்ந்தது கந்தர் அநுபூதியாகும். இது உருவில் சிறிதாயினும் பொருளிற் பெரியது.

வீரச் செயல் புரிவதிலும் ஒரு தர்மம் உண்டு. பகைவன் படை எடுக்காமல் இருக்கும் போதும் அஞ்சி ஓடும் போதும் அவனை ஒன்றும் செய்யக் கூடாது. அவன் வில் எடுத்துப் போர் செய்தால் அவனோடு வில் எடுத்தே போர் செய்ய வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-161)

## இந்திய அதிகாரி விசாரணை

யாழ்ப்பாணம், ஆக. 13

பூநகரியில் ஈரோஸ் இயக்கப் போராளிகள் இருவர் ஸ்ரீலங்கா இராணுவப் படையினரால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து இந்திய இராணுவ அதிகாரி திரு பாலகிருஷ்ணன் கடந்த திங்கட்கிழமையன்று விசாரணை நடத்தினார்.

பூநகரி பிரசைகள் குழுத் தலைவர் திரு. பொ. தங்கராசா உட்பட பலர் சாட்சியமளித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான விடயங்களை நேரில் கண்டவர்களின் சாட்சியங்களும் பதியப்பட்டன. தடயப் பொருள்களும் சமர்பிக்கப்பட்டன. (உ)

# அனலைதீவு படகுச்சேவை மாற்றம்

அனலைதீவு, ஆக 13

சென்ற ஒரு வருட காலமாக அனலைதீவு மக்களின் படகுச்சேவை குறிகட்டுவான் ஊடாக நடைபெற்றது.

நிலைமை வழமைக்குத் திரும்பியதை அடுத்து கடந்த 8 ஆம் திகதி முதல் அனலைதீவிற்கான படகுச்சேவை ஊர்காவற்றுறை மார்க்கமாக நடைபெறுகிறது.

நயினாதீவு— அனலைதீவுச் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

அலை அரசி படகு திருத்தவேலைகள் முடிந்தவுடன் அலை அரசி படகுச்சேவை அனலைதீவு மக்களுக்கு மீண்டும் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அனலைதீவு மக்கள் அரசாங்க அதிபரிடமும் இந்திய சமாதானப் படையினரிடமும் பிரஜைகள் குழு மூலம் விண்ணப்பித்துள்ளனர். (உ-18)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

இராமநாதன் நுண்கலைக் கழகம்

இசைக்கலைமணி/நாட்டியக்கலைமணி பயிற்சிநெறியின் அனுமதிக்கான

செய்முறை நேர்முகப் பரீட்சை 1987 / 88

மேற்குறித்த கற்கை நெறியின் அனுமதிக்கான செய்முறை, நேர்முகப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 21 ஆம், 22 ஆம், 23 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது. தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் மேற்படி பரீட்சை தொடங்குவதற்கு 05 தினங்களுக்கு முன் நேரில் உதவிப் பதிவாளர்/பரீட்சைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

— பதிவாளர்


# தென் இலங்கையில் 10 தினங்களில் 500 துப்பாக்கிகள் அபேஸ்!

கொழும்பு, ஆக. 13

மொனறாகலை, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை மாவட்டங்களில் கடந்த பத்துத் தினங்களில் 500க்கு அதிகமான துப்பாக்கிகள் இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையடிக்கப்பட்டன.

துப்பாக்கிகளைப் பறிகொடுத்தவர்கள், பழிவாங்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யவில்லை என்று தெரிய வந்துள்ளது.

இதனிடையில் அனுமதி பெற்று துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களிடம் இருந்து துப்பாக்கிகளைத் திரும்பப் பெறுவதற்கு பாதுகாப்புப்படையினருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்று பொலீஸ்மா அதிபர் அறிவித்து இருக்கிறார்.

சிலர் சீருடையில் சென்று துப்பாக்கிகளைப் பெற்று வருகின்றார்கள் என்றுகிடைத்ததகவலைத் தொடர்ந்தே பொலீஸ் மா அதிபர் முன்கண்டவாறு அறிவித்துள்ளார். (இ-ஏ)

## ஒப்பந்தம் கைச்சாத்தான தினத்தில்

# மூதூரில் கைதான இருவரைக் காணவில்லை

திருகோணமலை, ஆக. 13

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான 29 ஆம் திகதி மூதூரில் இலங்கை இராணுவம், ஊர்காவல் படை ஆகியோரால் கைது செய்யப்பட்ட ஐந்து தமிழரில் இரண்டு பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மூதூரில் பிரஜைகள் குழுவின் முறைப்பாட்டைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட இணைப்பதிகாரி இது பற்றி விசாரணை நடத்தினார் என்றும்—

அப்போது மூன்றுபேர் மட்டுமே தமது காவலில் இருப்பதாக இராணுவத்தினர் பதிலளித்தனர் என்றும் தெரியவருகிறது.

மூதூர், பெருவெளிக் கிராமத்தில் காலை 10 மணியளவில் இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் வயல் வெளிக்குச் சென்றனர்.

அங்கு வயல் வேலை செய்துகொண்டிருந்த 5 தமிழரைக் கைதுசெய்ததுடன் முப்பது மூடை நெல்லையும் டிராக்டரில் ஏற்றிக்கொண்டு சென்றனராம்.

இவர்களில் வேலுப்பிள்ளை, யோகநாதன், ஜோன்ஸன் ஆகிய மூவருமே பாதுகாப்புப்படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்று இணைப்பதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டது. (உ-எ-150)

## நோர்வேக்குழு பார்வையிட்டது

யாழ்ப்பாணம், ஆக. 13

ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலையை பார்வையிட்ட நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அங்கு நிலவும் பற்றுக் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர். தங்களால் முடிந்த உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக அவர்கள் உறுதி அளித்தனர். (இ-ஓ-10)


**Computer Programming Course**

AND

Radio, T. V. & Electronic ENGINEERING COURSE

தவிர்க்கமுடியாத காரணங்களால் இவ்விருவகுப்புகளும் 9-8-87 ஆரம்பிக்கப்படவில்லை. புதிய வகுப்புகள் 15-8-87 சனிக்கிழமை 10 மணிக்கு 21, பிரதான வீதியில் ஆரம்பமாகும்.

**CANTABIA INSTITUTE**

13, Rasavin Thoddam Lane, JAFFNA.

★ பிரயாண ஒழுங்குகள் ★

குவைத் (Petroleum Refinery)

குவைத் நாட்டிற்கு பின்வரும் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட இருப்பதால் தகுதியாயுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

SUPERVISORY STAFF

1. Welding Inspector (Exp. 10 Years) 100 K. D. with Lloyd's or Equal Cert,
2. Piping Foreman (Exp. 10 Years) 75 K. D.
3. Duct Foreman (Exp. 10 Years) 75 K. D.
4. Engineers (a) Mechanical 175 K. D (Exp. 10Years)
5. (b) Electrical (Industrial) 175 K. D.

SKILLED LABOURER — 8 Years Exp.

1. High Pressure Pipe Welders 75 K. D. (With Lloyd's or Equal Cert)
2. Pipe Fabricator and Fitters 65 K. D,
3. Duct Fitters 65 K. D.
4. Duct Fabricators 65 K. D.
5. Electrician (Industrial Wiring) 65 K. D.
6. Safety Officer and Nurse 80 K. D,

Semi Skilled 3 K 4 Years Exp.

Pipe Fabricators and Fitters Pipe Weldnrs 60 K. D

UNSKILLED LABOURER

1. For General Carring, Loading, Unloading of Heavy Equipments and Pipes Food Allowance 25 K. D. Each — Contract Period 2 Years

முக்கிய குறிப்பு!-

13 ஆம் திகதி காலை நேர்முகப்பரீட்சைக்காக புறப்பட இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

✱ கடந்த 29-06-87, 09-07-87 திகதிகளில் எமது முகவர் நிலையத்தினூடாக குவைத் நாட்டிற்கு (AL TREAKIT TRADING-EST-HARBOUR-KUWAIT) பிரயாணம் செய்தவர்களின் பெயரும் முகவரியும் வருமாறு:-

1. சின்னத்தம்பி சுந்தரம் - (FORKLIFT) நல்லுடை, புத்தூர் கிழக்கு, புத்தூர்.
2. செல்வன் சர்வானந்தராசா (LABOURER) J 175052 நவாலி, மானிப்பாய்.
3. குமாரவேலு குமரகுருபரன் (LABOURER) H0171756 கந்தரோடை, சுன்னாகம்.
4. நாகர் கதிரவேலு விஜயரெத்தினம் (LABOURER) H0116246 நவாலி, மானிப்பாய்.
5. தம்பு தர்மராசா (LABOURER) G 0322804 இணுவில் மேற்கு, இணுவில்.
6. பொன்னையா பாலசுப்பிரமணியம் (LABOURER) G0221550 ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.
7. சம்பந்தர் இராஜமூர்த்தி (LABOURER) H0174990 ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்
8. அப்பர் உமாபதிசிவம் (LABOURER) H 0334691 கச்சாய் வீதி கொடிகாமம்.
9. வேலுப்பிள்ளை சிறீஸ்கந்தராசா (LABOURER) H 0117574 தவசியா குளம், வவுனியா
10. வேலுப்பிள்ளை பொன்னுத்துரை இரவீந்திரன் (LABOURER) J0130721 இணுவில் கிழக்கு, இணுவில்.
11. சங்கரப்பிள்ளை ஸ்ரீ குகன் (SUPERVISOR) J 0150023 இடைக்காடு ம. ம. வித்தியாலயம், இடைக்காடு.

முக்கிய குறிப்பு—

Bess Engineering Corporation. (THAIVAN) KUWAIT நாட்டிற்கு Pass Port தந்தவர்களும் Free Selection முடிந்தவர்களும் உடனே சந்திக்கவும்

தலைமை அலுவலகம்: **Construction & Development Company Ltd.**

37, S. D. SE Jeyasinghe Mawatha, Nugegoda,

தொடர்பு: (குடாநாட்டின் ஏகப்பிரதிநிதி)

**V. P. பாலசுப்பிரமணியம் (V. P. Bala)**

c/o. N. V. பொன்னுத்துரை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

Licence No. 96


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

இன்பமானது, இரண்டு துன்பங்களுக்கு இடைப்பட்டது. அந்தத் துன்பத்தை நீக்கி விட்டால் எஞ்சி நிற்பது முழுவதும் இன்பமே.

—பகவான் சத்திய சாயிபாபா.


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

13.8.1987     த.பெ.இல: - 23


# யுத்த நிறுத்தமும் கிழக்குத் தமிழரும்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் திரு. ஜெயவர்த்தனவும், திரு. ராஜீவ் காந்தியும் ஒப்பமிட்டு நேற்றோடு இரண்டு வாரங்கள் கழிந்துவிட்டன.

ஒப்பந்தத்தின் விளைவாக, மின்னுமல் முழங்காமல் வந்த மழைபோல, வடக்கில் அமைதி நிலை திடீரென வந்துள்ளது யுத்த நிறுத்தமும் ஓரளவு சரிவரக் கடைப்பிடிக்கப்பட்டுச் சாதாரண நிலை வேகமாகத் திரும்பிக் கொண்டிருக்கிறது.

ஆனால் கிழக்கில் நிலைமை அப்படி அல்ல. ஸ்ரீலங்கா அரசபடைகள் மிகப் பெரும் எண்ணிக்கையில் அங்கு இன்னமும் நிலை கொண்டிருக்கின்றன. இந்திய அமைதிப் படையினர் அவர்களை விட மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரும், யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னரும், கிழக்கில் அரசாங்கப் படைகளின் அடாவடித்தனங்கள் குறைந்தபாடில்லை.

யுத்த காலம் போலவே தொடர்ந்து மக்களைத் தாக்கியும், முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டோரைச் சித்திரவதை செய்தும் வருகின்றனர். இந்திய அமைதிப்படை அங்கு போய்ச் சேர்ந்த பின்னரும், அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்கள் எப்போதும் அச்சத்துடனேயே வாழ்கிறார்கள் என்று செய்திகள் கிடைக்கின்றன.

யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தை நோக்குவோமானால், வடக்கின் நிலையும் கிழக்கின் நிலையும் வெவ்வேறுபட்டு நின்றன.

வடக்கில் படையினர் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்தனர். அவர்கள் வெளியே வராமல் போராளிகள் பார்த்துக்கொண்டனர்.

ஆனால் கிழக்கில் அப்படிச் செய்ய முடியவில்லை மற்ற இன மக்களும் அப்பகுதிகளில் வாழ்வதால், படையினரை முகாம்களுக்குள் முடங்கச் செய்வதில் போராளிகளால் வெற்றிகாண முடியவில்லை.

அதனால் கிழக்கில் உள்ளவர்கள், ஆயுதப் படையினரின் நேரடி இம்சைகளுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாக வேண்டி இருந்தது. தேடுதல், சுற்றிவளைப்பு என்ற போர்வையில் அப்பாவி மக்கள் ஆற்றொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டனர். சுருங்கச் சொல்வதானால், கிழக்கில் வாழும் தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி திருமணமானவர்கள் கூட முகாம்களுக்கு ஒருமுறையாவது போய் வராதவர்கள் இல்லை என்ற அளவுக்கு அங்கு இராணுவக் கொடுமைகள் மலிந்திருந்தன.

அதன் காரணமாக ஒப்பந்தம் கைச்சாத்தாகி விட்டது, யுத்த நிறுத்தம் வரப்போகிறது என்ற செய்திகள் வந்தபோது அதிகம் மகிழ்ந்தவர்கள் கிழக்கு மாகாண மக்கள். அமைதி நிலை உண்டானால் நிம்மதிக் காற்றைச் சுவாசிக்கலாம் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அது முடியவில்லை.

கிழக்கைப் பொறுத்த மட்டில் தாக்குதல் சம்பவம் நடந்த பின்னர்தான் இந்திய அமைதிப்படை அந்த இடத்துக்கு வரமுடிகிறதாம்.

ஊர்காவல் படை என்ற வேண்டாத படையிடம் இருந்து ஆயுதங்கள் திரும்பப் பெறப்படும் என கூறப்பட்ட போதிலும் அது இன்னமும் நடக்கவில்லை.

மொத்தத்தில்—

போராளிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்ட போதிலும். கிழக்கில் இன்னும் யுத்த நிறுத்தம் உண்டாகவில்லை. ஒப்பந்தத்தை அரசபடையினரே— அரசாங்கத்தினரே— மீறுகின்றனர். இந்திய அமைதிப்படைகளால் ஸ்ரீலங்கா படைகளைச் சரிவரக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஒப்பந்தம் சரிவர அமுலாவதற்கு இந்தியா பொறுப்பேற்றது. தமிழ் மக்களின் பாதுகாப்பையும் இந்தியாவே பொறுப்பேற்றது. ஆனால் அது, தான் ஏற்ற பொறுப்பைச் சரிவர நிறைவேற்றமுடியாத நிலையில் இருப்பது வருந்தத்தக்கது. ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வாரங்களில் இந்த நிலை என்றால் நாட்கள் நகர நகர எப்படியாகுமோ ...?

அது மட்டுமா, கொழும்பு - திருகோணமலை வீதியில் இந்த வாரமும பெரும்பான்மை இன மக்கள் குடியேற்றப்படுகிறார்கள் என்று ஒரு தகவல். கொட்டில்கள் அங்கு நாளாந்தம் முளைக்கின்றன.

இப்படிச் செய்வதன் மூலம் வடக்கு, கிழக்கு இணைப்பை சர்வஜன வாக்கெடுப்பில் தோற்கடிக்க அரசாங்கம் அத்திவாரமிடுகிறதா?

இந்திய அமைதிப் படைகளும், இந்திய அரசாங்கமும் இதனையும் கருத்திற் கொள்ள வேண்டும். போராளிகளின் ஆயுதங்களை வாங்கி முடித்ததும், இம்மாதம் 15ஆம் திகதியுடன் அமைதிப்படையைத் திருப்பி அனுப்பப் போவதாக ஜனாதிபதி கூறுகிறார். அப்படியாயின் ஒப்பந்த அமுல்.........என்னாவது?

## வலைகுடா நெருக்கடி மோசமடைகின்றது

லண்டன், ஆக.12

வளைகுடா நெருக்கடி மேலும் சிக்கல் அடைந்து உள்ளது.

கடற்கண்ணிகளை அகற்ற யுத்தக் கப்பல்களை வளைகுடாவுக்கு அனுப்புவது என்று பிரிட்டனும் பிரான்ஸும் முடிவு செய்தமையே இதற்குக் காரணம்.

வளைகுடாவில் ஈரான் போட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும்பணியில் ஒத்துழைக்கும்படி அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை இந்த இரண்டு நாடுகள் முன்னர் நிராகரித்து இருந்தன.

ஆனால் வளைகுடா தெற்குக் கடலில் ஏராளமான கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே பிரிட்டனும் பிரான்ஸும் முன்னைய தீர்மானத்தை மாற்றியுள்ளன.

இம்மாற்றத்தை அமெரிக்கா வரவேற்று உள்ளது.

தெற்குக் கடலில் போடப்பட்டுள்ள கண்ணி வெடிகளால் நூற்றுக்கு மேற்பட்ட வர்த்தகக் கப்பல்கள் பாதிக்கப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## மக்கள் ஆர்ப்பாட்டம்

இஸ்லாமபாத், ஆக 12

பெஷவார் அருகில் மரடான்பகுதியில் இடம்பெற்ற மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக மக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

இவற்றில் 15 பேர் உயிரிழந்தனர்; 60க்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர் என்பது தெரிந்ததே.

இச்சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸார் மீது சல் வீசினர் ஆப்கன் அகதிகளை ஏற்றிச்சென்ற ட்ரக் ஒன்றையும் அவர்கள் தாக்கினர்.

ஆப்கன் அரசின் ஏஜண்டுகள்தான் இக் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குக் காரணம் என்று பாகிஸ்தான் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரடன் கிராமம் ஆப்கன்-பாகிஸ்தான் எல்லையில் உள்ளது. (உ-எ)

**வெளி உலகில்**

## குடிவரவுச் சட்டத்தை கனடா இறுக்குகின்றது

ஒட்டாவா, ஆக. 12

சட்டவிரோதமாகக் குடியேறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக குடிவரவுச் சட்டத்தை கனடா அரசு திருத்தியுள்ளது.

சரியான அடையாளம் இன்றி நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைபவர்களை ஏழு தினங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்யவும்—

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடியவர் என்று கருதப்படுபவரை உடனடியாக நாடு கடத்தவும் கூடசட்டத் திருத்தங்கள் இடமளிக்கின்றன.

சட்டவிரோதமாகக் குடியேறியவர் என்பது நிரூபிக்கப்படின் விதிக்கப்படும் அபராதம் 5 ஆயிரம் டாலராக அதிகரிக்கப்படவுள்ளது; சிறைத் தண்டனையும் அதிகரிக்கப்படவுள்ளது. (உ-எ)

## சி. ஐ. ஏக்கு எதிராக கல்கத்தாவில் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஆக 12

இந்தியாவை விட்டு சி ஐ ஏ வெளியேற வேண்டும் என்று கோரி இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் செய்தனர்

கல்கத்தாவில் உள்ள அமெரிக்கத் தகவல் சேவை நிலையத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அலுவலகம் மீது நாட்டு வெடிகுண்டுகளும் கற்களும் வீசப்பட்டன.

இதற்கு முன்னர் அமெரிக்க சி ஐ. ஏ. எதிர்ப்புக் கூட்டம் ஒன்றில் இந்திய மத்திய அமைச்சர் ரஞ்சன்தாஸ் முன்ஷி பேசினார். அதன் பின்னரே ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அதிபர் றேகனின் கொடும்பாவியை எரித்தனர். பொலிஸார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர். பலர் கைதுசெய்யப்பட்டனர். (உ-எ)

## ராஜீவுக்குப் பாராட்டு

ஒட்டாவா, ஆக 12

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கிய துணிகரச் செயலுக்காக கனடா பிரதமர் மல்ரோனி, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை பாராட்டிச் செய்தி அனுப்பி வைத்திருக்கின்றார். (உ-எ)

## விமான விபத்து!

மேற்கு ஜெர்மனியில் மியூனிச் விமான நிலயத்தில் இருந்து புறப்பட்ட பாரம் குறைந்த விமானம் ஒன்று விடுதி ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியதால் 6 பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர். (உ-எ)

# ஒப்பந்தச் சட்டம் சபையில் தடங்கலின்றி நிறைவேறும்

## தொண்டா நம்பிக்கை

அமைச்சர் தொண்டமான் 'சண்டே ஐலண்டு'க்கு அளித்த பேட்டியின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

**கேள்வி:** ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்குத் தேவையான சட்ட மூலத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்காவிட்டால் என்ன நிலை ஏற்படும்?

**தொண்டா:** ஒப்பந்தம் அமுல் நடத்தப்படும் என்பதே எனது விளக்கம். நாடாளுமன்றத்தில் இதற்குத் தடங்கல் எதுவும் இருக்காது. எதிர்ப்புக்கள் சில இருப்பினும் சட்டமூலம் நிறைவேற்றப்படும்.

**கேள்வி:** புதிய தேர்தலில் 3 இல் 2 பங்கு பெரும்பான்மையை ஒரு கட்சியும் பெறாவிட்டால் ஒப்பந்தம் எப்போதும் நிறைவேற்றப்படமாட்டாதே.

**தொண்டா:** யோசிக்கவேண்டியதில்லை. அந்த நிலைமையில் புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்றை நாம் பெறுவோம். நாம் அரசியல் நிர்ணய சபையாக மாறி செயற்படுவோம்.

**கேள்வி:** இலங்கை இறைமையுள்ள சுதந்திர நாடு. வெளிநாட்டு இராணுவ ஆலோசகர் பிரிவு, ஒலிபரப்பு நிலையங்கள் ஆகியவற்றை இலங்கையில் செயல்பட விடுவது போன்ற உள்நாட்டுப் பிரச்சினைகள் குறித்து இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள என்ன தேவை ஏற்பட்டது?

**தொண்டா:** ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட சம்பந்தப்பட்டவர்களின் அபிப்பிராயம் அது. ஒப்பந்தத்தில் அவ் விவகாரங்களையும் சேர்க்க வேண்டும் என்று அவர்கள் எண்ணினர்.

இரண்டு நாடுகளின் தலைவர்களும் பேசி தீர்வு கண்டனர். இது குறித்து ஏனையோர் ஒன்றும் சொல்லமுடியாது.

**கேள்வி:** இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கு இந்தியா இராணுவப் பயிற்சி வழங்கும் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் நாம் வேறு நாடுகளில் இப்பயிற்சிகளைப் பெறமுடியாதா?

**தொண்டா,** ஒப்பந்தம் அப்படிச் சொல்லவில்லை நிலைமையைப் பொறுத்துத்தான் எல்லாமே உள்ளது. எப்படியும் நாம் இந்தியாவில் பயிற்சி பெற்று வந்தோம்.

**கேள்வி:** இணைப்புத் தொடர்பாக ஒரு வருடத்தினுள் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என ஒப்பந்தம் கூறுகின்றது.

தனது விருப்பத்துக்கு இணங்க அந்த சர்வசன வாக்கெடுப்பை கால வரையறையின்றி ஒத்திப் போட ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கும் விதியும் ஒப்பந்தத்தில் உண்டு.

ஆகவே சர்வசன வாக்கெடுப்பு காலவரையறையின்றி ஒத்திப் போடப்படமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

**தொண்டா:** ஜனாதிபதி எப்படி தனது விருப்பத்தைப் பயன்படுத்துகின்றார் என்பதில் தான் எல்லாம் தங்கி உள்ளது. அது பற்றி எம்மால் ஒன்றும் சொல்ல முடியாது.

**கேள்வி:** மாகாண சபைத் தேர்தல் சர்வசன வாக்கெடுப்பு ஆகியவற்றைக் கவனிக்க இந்தியத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் வருவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த பொதுத் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்புக்குழு வரவேண்டும் என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கோரியபோது, அது மக்களை அவமதிக்கும் கோரிக்கை என்று அரசுத் தலைவர்கள் கண்டித்தனர். இப்போது அரசாங்கம் மக்களை அவமதிக்கவில்லையா?

**தொண்டா:** திருமதி பண்டாரநாயக்காவின் கோரிக்கையினால் தான் அரசும் இதற்கு ஒசுதுக் கொண்டிருக்க வேண்டும். திருமதி பண்டாரநாயக்காவின் கோரிக்கையைப் பின்னர் அரசு பாரதூரமாக எடுத்துப் பரிசிலனை செய்திருக்கக் கூடும்.

**கேள்வி:** தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தொடர்ச்சியான ஆயுதப் போராட்டம் தான் இணைப்புக்கு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது. இப்போது அவர்கள் அரசியல் நடவடிக்கையில் சேர்ந்துகொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் விரக்தி நிலையை அதிகரிக்கக் கூடிய வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி செல்வாக்குப் பெறும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

**தொண்டா:** எல்லாம் மக்களைப் பொறுத்தது தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய தமிழர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். துன்பப்படுவதாகத் தமிழர் நினைத்தனர். அதனால் பல அமைப்புக்கள் உதயமாகின. இப்போது ஒரு தீர்வு காணப்பட்டு உள்ளது. தங்கள் நலன்களைக் கவனிப்பது யார் என்பதைத் தமிழ்மக்கள் அனைவரும் தீர்மானிக்க வேண்டும்.

**கேள்வி:** இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒப்பந்தத்தை பூரணமாக ஆதரிக்கின்றதா?

**தொண்டா:** ஆம்.

(முற்றும்)

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

## ஆறுமுகப்பொருளே!

தாய்மையின் கோலங் கொண்டே
தண்ணருள் பொழியும் வேளே
வாய்மையின் வாழ்வு தந்தே
வன்செயல் ஒழிப்பாய் ஸ்வாமி
நோய்மையில் வாடும் மக்கள்
நோவினைத் தீர்த்தே நாட்டில்
தூய்மையின் விளக்காய் நின்று
துன்பங்கள் தீர்ப்பாய் சரணம்.

★ ★ ★

கோலமார் மயில்மேல் வந்தே
கொள்ளைகள் கொலைகள் நீக்கி
சீலமார் வாழ்க்கை தந்தே
சிறுபிணி யாவும் தீர்ப்பாய்
ஞாலமார் நல்லை வாழ்வே
நாரணன் மருகா நம்பி!
ஆலமார் தெய்வம் தந்த
ஆறுமுகப் பொருளே சரணம்.

★ ★ ★

நல்லையின் வாழ்வே சரணம்
நற்றமிழ்ச் செல்வா சரணம்
முல்லையின் கடவுள் என்னும்
முகுந்தனின் மருகா சரணம்
தில்லையின் தெய்வம் போற்றும்
தீனரின் நிழலே சரணம்
எல்லையில் துன்பம் எல்லாம்
எமக்குமே தீர்ப்பாய் சரணம்.

- சி[illegible]

## ஷஷ்டியப்த பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஆக. 13

ஊரெழு சிவாகம வித்யா பூஷணம் சிவஸ்ரீ பா. வைத்தியநாத சிவாசாரியாரின் அறுபதாண்டு நிறைவை முன்னிட்டு ஷஷ்டியப்த பூர்த்தி விழா இன்று ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோவிலில் நடைபெற உள்ளது.

பகல் நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து மணவிழா வைபவம் நடைபெறும். (உ)

## அம்புலன்ஸ் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஆக 13

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு பந்துலஅபயசேகரா மந்திகை ஆஸ்பத்திரிக்கான அம்புலன்ஸை மந்திகை ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி சிவகுமாரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். (இ-ஒ-10)

**வாசகர் திருமுகம்**

## முட்டுக்கட்டை ஏன்?

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் கைத்தொழில் ஸ்தாபனங்களையும், மோட்டார் வாகன வேலைத் தலங்களையும் வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டுமென யாழ். ஆணையாளர் தன்னிச்சையாக எடுத்த தீர்மானத்தை, எம்மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை மனதில் கொண்டு, கைவிடும்படி சம்பந்தப்பட்டசகலரும் குரல்எழுப்ப வேண்டும்.

யாழ். மாநகரம் புனரமைக்கப் படுவதை வரவேற்கும் அதேவேளை, இக்காலகட்டத்தில் அதை யோசிக்க வேண்டுமா? யாழ். மாநகரசபை எல்லைக்குள் இத்தனை இழப்புக்கள், அழிவுகள், உயிர்ச்சேதங்கள், தொழில் நஷ்டங்கள், வேலை இழப்புகள், கட்டடச் சேதங்கள் ஏற்பட்டு மக்கள் தமது இடங்களைவிட்டு வெளியேறி, திரும்ப வந்து தொழிலை எவ்விதம் ஆரம்பிக்கலாமென்று ஏக்கமுற்றிருக்கும் வேளையில் யாழ் ஆணையாளரின் அறிவித்தல் "பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதை" போன்றதாகும்.

எம்மக்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஆணையாளர் நஷ்டஈடு வழங்குவாரா?

காப்புறுதி செய்தவர்கள் கூட, "யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்கத்திற்கு" காப்புறுதிக் கூட்டு ஸ்தாபனத்தால் கைவிரிக்கப்பட்டது போன்ற நிலைக்கு வரமாட்டார்கள் என்பதற்கு ஆணையாளர் உத்தரவாதம் கொடுப்பாரா?

கைத்தொழில், மோட்டார் வாகன வேலைத் தலங்களை மாற்று இடங்களில் அமைக்கவும், தொழில் நடத்தவும், ஆணையாளர் -- காணி, கட்டட ஏற்பாடுகளும், பண உதவியும் செய்வாரா?

செம்மணி-கல்லுண்டாய், வல்லை வெளிகளில் இந்த ஸ்தாபனங்களைப் பெரிதாக அமைத்து, நயம்படச் செய்ய முடியுமா? அல்லது சாத்தியமா?

யாழ்நகரில் இருக்கும் நூற்றுக்கும் அதிகமான சிறிய கைத்தொழில் ஸ்தாபனங்கள், மோட்டார் வாகன வேலைத் தலங்கள் அதிகமானவை தனியார் ஸ்தாபனங்களாக, சொற்பலாபத்தில் மக்கள் வசதிக்கேற்ப இயங்குகின்றன.

பெரிய கைத்தொழில் ஸ்தாபனங்கள் அனேகம் தனி உற்பத்தியில் ஈடுபட்டு வெளி இடங்களில் இயங்குகின்றன.

யாழ்நகரில், இடிந்த கட்டடங்களை எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் வர்த்தக, கைத்தொழில் நடத்துவோர் சீரமைக்க முயலும்போது ஆணையாளர் புதிய சட்டத்தைக் கடைப்பிடிக்கப் போவதாக எச்சரிப்பது வேதனைக்குரியது; மறுபரிசிலனை செய்ய வேண்டியது.

எம்மவர் தமது தொழில்களை மறுபடி ஆரம்பிப்பதற்கு யாழ் ஆணையாளர் எதற்காக முட்டுக்கட்டை போட வேண்டும்?

சமாதானம் ஏற்படும் தறுவாயில் புதிய சட்டத்தை அமுலாக்கலாமா? இது மேலிடத்து உத்தரவா?

யாழ் மாநகர சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கூடி, மக்களின் கஷ்ட நஷ்டங்களை, வசதிகளை, பரிசீலனை செய்து காலத்திற்கேற்ப தீர்மானங்களை எடுத்துச் செயற்படுவதே முறையானது.

ஆணையாளரின் இப்புதிய தீர்மானத்தால் பாதிக்கப்படுவோர் தங்கள் அபிப்பிராயத்தையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்த வேண்டும். அதேவேளை முன்னைய மாநகரசபை அங்கத்தவர்கள், முதல்வர்கள் தம் கருத்தையும் தெரிவிக்க வேண்டும்.

எஸ். பி. வேலாயுதபிள்ளை,
காரியதரிசி,
வட இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனம்



**பொய்யாமொழி**

**குறள்:**

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள

**பொருள்:**

காகம் (தனக்குக் கிடைத்ததை) மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவிஅழைத்து உண்ணும்; ஆக்கமும் அத்தகைய இயல்பு உடையவர்க்கே உண்டு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மீண்டும் வழமையான இடத்தில்
★ ராஜ் கோபால்ஸ் ★
திருமண வைபவங்களுக்கேற்ற
பட்டுப்புடைவைகளைப் பெற்றுக்கொள்ள
★ ராஜ் கோபால்ஸ் ★
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

13 - 08 - 1987 வியாழக்கிழமை

சகலவித
ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இரத்தத்தில் எழுதப்பட்ட வீரகாவியம்

## புறநானூறுக்குப் பின்னர் புதுவரலாறு படைத்தோர்

### இளைஞர்கள் குறித்து அமிர்

சென்னை, ஆக. 13

புறநானூறுக்குப் பின்னர் புது வரலாறு படைத்தவர்கள் எமது நாட்டின் இளைஞர்கள். இரத்தத்தில் எழுதிய வீர காவியம் அது.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் இப்படித் தெரிவித்தார்.

சென்னையில் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் டாக்டர் ஜனார்த்தனனுக்கு அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவில் திரு அமிர்தலிங்கம் பேசினார்.

அப்போது அவர் மேலும் சொன்னதாவது;

இந்திய—இலங்கை ஒப்பந்தம் இன்னும் பூர்த்தியாகவில்லை: ஒப்பந்தம் சட்டபூர்வமாகத் தயாரிக்கப்படவில்லை.

இன்னும் 6 வாரங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

அதை முழுமையாகப் பூர்த்தி செய்யவே தமிழகத்தில் தங்கி நிற்கிறோம்.

புதிய தமிழ் மாநிலத்தின் அதிகாரங்களை ஆக்கிக் கொடுக்கும் பணியை முடித்துவிட்டு இளம் சந்ததிகள் ஏற்று நடத்தும் வகையில் புதிய மாநிலத்தின் பொறுப்புக்களை விட்டுக் கொடுக்க நாங்கள் எப்போதும் தயாராக உள்ளோம்.

இளைஞர்களின் தியாகத்தினால் தந்தை செல்வாவின் குறிக்கோள் நிறைவேறும் வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது

— இப்படி திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். கூட்டத்தில் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், திருமலை முன்னாள் எம். பி திரு. இரா. சம்பந்தன் ஆகியோரும் பேசினர். (உ-எ)

## இப்பிராந்தியத்தின் காவலன் ராஜீவ்

### ஜே. ஆரின் புகழாரம்

ரோம், ஆக. 13

பிரதமர் ராஜீவ் காந்தி எனது நண்பர் அவரை நான் விரும்புகின்றேன். இந்தியா இப் பிராந்தியத்தின் காவலனாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா ரோம் நாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இப்படிச் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

ராஜீவ் காந்தியில் நான் நம்பிக்கை வைத்து உள்ளேன். அதனால் தான் எனது நாடு இந்தியாவுடன் மேலும் நெருங்கி வந்துள்ளது.

ஜெனிப்பிரச்சினையில் முதன் முதலாக இந்தியா நேரடிப் பொறுப்பை ஏற்க முன் வந்ததைத் தொடர்ந்து தான் உலக வரலாற்றிலே சாதனை படைத்த இந்த ஒப்பந்தத்தை உருவாக்க முடிந்தது.

இந்தியா சக்தி மிகுந்த நாடு. இதனை இலங்கை ஏற்று உள்ளது

இது மறுக்க முடியாத உண்மையும் கூட

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளே இதனை ஏற்றுக்கொண்டுள்ளன—

—இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்தார். (உ-எ)

### இன்ஸ்பெக்டர் மீது சூடு!

கொழும்பு, ஆக. 13

அளுத்கம பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபரினால் சுடப்பட்டார்.

காலில் காயத்துடன் இன்ஸ்பெக்டர் தம்மித்த கொடகம உயிர் தப்பினார். (உ-எ



(படங்கள் ஜெயம்)

காயமடைந்த இந்திய இராணுவச் சிப்பாய் பங்கஜம் விக்ரமுக்கு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்படுவதை முதலாவது படத்திலும்— காயமடைந்த சிப்பாய்களுக்கு வழங்குவதற்காக இந்திய சிப்பாய் ஒருவர் இரத்ததானம் செய்வதை கீழ்ப்படத்திலும் காணலாம்.

(படங்கள் ஜெயம்)

## அமைச்சர் பண்ருட்டி டில்லிக்கு அழைப்பு

சென்னை ஆக 13

இந்திய மத்திய அரசின் அவசர அழைப்பை ஏற்று தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் நேற்று புதுடில்லி பயணமானார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் சரிவர அமுல் நடத்தப்பட போராளிகள் இயக்கங்களுக்கு இடையேயான உட்பூசல் தடையாக இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூறுவதற்காகவே அமைச்சர் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பொறுமை வேண்டும் என்கிறார் தூதுவர்

புதுடில்லி, ஆக. 13

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதில் தாமதம் ஏற்பட்டாலும் பொறுமை இழந்துவிடக் கூடாது.

இப்படி புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின தெரிவித்தார்.

புதுடில்லியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் திரு. திலகரத்தின பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது:

'இனியும் நாட்டில் இரத்தக் களரியை அனுமதிக்க முடியாது என்ற நிலையில்தான் இந்திய— இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.

ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் நடத்துவதில் சில சிரமங்கள் ஏற்படலாம். அதனை அமுல் நடத்துவதில் இலங்கை உறுதியாக உள்ளது—என்றார். (உ-எ)

## கண்டனக் கூட்டம் பாராட்டுக் கூட்டமாகியது

வாஷிங்டன், ஆக. 13

இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளைக் கண்டிப்பதற்காக அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஆசிய பசுபிக் விவகார உபகுழுக் கூட்டம், இந்திய, இலங்கை அரசுத் தலைவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோரைப் பாராட்டும் கூட்டமாக முடிவடைந்தது.

இத்தலைவர்கள் காட்டிய அரசியல் விவேகம், தனிப்பட்ட துணிச்சல் ஆகியவற்றை குழு பாராட்டியது.

தமிழரின் மனித உரிமைகளை மீறுவதாக இலங்கை அரசைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்த ஜனநாயகக் கட்சி செனட்டர் மெர்வின் எம் டிமலி, அதனை வாபஸ்வாங்கிக்கொண்டு பாராட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

## ஆயுதம் ஒப்படைக்கும் நிலையைக் குறித்தே கைதிகள் விடுவிப்பு

கொழும்பு, ஆக 13

ஆயுதங்கள் ஒப்படைக்கப்படுவதில்காணப்படும் முன்னேற்றத்தைப் பொறுத்தே தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுகின்றனர்.

— இப்படி கொழும்பு பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பூரணமாக சகல தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவது, ஆயுதங்கள் முழுவதும் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என அரசு திருப்தி அடைந்த பின்னரே இடம்பெறும்.

இப்படி பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல தெரிவித்தார்.

இதனிடையில் தேடப்பட்டுவரும் போராளிகள், மேல் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளோர் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும்.

இதற்கான வழிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இப்படி நீதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## ஆயுத ஒப்படைப்பின் பின்னரே பாதுகாப்பிற்கு இந்தியஅரசு பொறுப்பு

புதுடில்லி, ஆக 13

ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் போராளிகளின் பாதுகாப்பை இந்திய மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும்.

இந்த உறுதிமொழியை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தந்திருப்பதாக தமிழக [illegible] அமைச்சர் [illegible] சொன்னார்.

புதுடில்லியில் பிரதமர் காந்தியைச் சந்தித்த பின்னர் திரு இராஜராம் இதனை வெளியிட்டார்.

திரு. இராஜராம் ஜனாதிபதி வெங்கட்ராமனையும் சந்தித்தார். (உ-எ)

### ஜீவா இன்று ரஷ்யா பயணம்

''மல்லிகை'' சஞ்சிகையின் ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா இன்று மாலை சோவியத் யூனியன் பயணமாகிறார்.

சோவியத் எழுத்தாளர் சங்கம் சோவியத் பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் அழைப்பை ஏற்றுச் செல்லும் இவர் ஒரு மாத காலம் அங்கு தங்கியிருப்பார். (அ)

### இதுவே முதல் தடவை

விடுதலை செய்யப்படும் அரசியல் கைதிகளை பெரும் எண்ணிக்கையில் பாதுகாப்பாக ஏற்றி இறக்கும் பணியில் இந்தியக் கடற்படையின் யுத்தக் கப்பல்கள் ஈடுபடுத்தப்படுவது அதன் சரித்திரத்திலேயே இதுவே முதல் தடவை.

விசாகப்பட்டினத்தை தலைமை அலுவலகமாகக் கொண்ட இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிரிவு வெளியிட்ட உத்தியோகபூர்வக் குறிப்பில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### நேசையாவிடம் பொறுப்பு?

கொழும்பு, ஆக 13

முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையில் மூன்று பேர் கொண்ட இடைக்கால நிர்வாகக் குழு அமைக்கப்படும் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

முன்னாள் யாழ் அரச அதிபர் லயனல் பெர்னாண்டோ, திருமலை நகரசபையில் ஐ.தே.க. உறுப்பினராக இருந்த சட்டத்தரணி ஓ எல். எம். இஸ்மாயில் ஆகியோர் இடைக்கால நிர்வாகத்தில் பங்கேற்கலாம் என்றும் அச்செய்தி தெரிவிக்கிறது. (உ-எ)

### ஊர்காவலரிடம் துப்பாக்கிகள் பெறப்படுகின்றன

கொழும்பு, ஆக. 13

ஊர்காவல் படையினரிடம் இருந்து துப்பாக்கிகளை திருப்பிப் பெறும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதுவரை 800 துப்பாக்கிகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. (உ-எ)

(உ-7-10)

### கூட்டணி பிரமுகர்களும் வருவர்

கொழும்பு ஆக 13

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக இந்திய மத்திய அரசிடமிருந்து சில விளக்கங்களை பெற்ற பின்னர் கூட்டணித் தலைவர்கள் தாயகம் திரும்புவர்.

இத்தகவலை திருமலை முன்னாள் எம் பி இரா. சம்பந்தன் கொழும்புச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தாம் தாயகம் திரும்புவதைத் திரு. அமிர்தலிங்கமும் ஊர்ஜிதம் செய்ததாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தெரிவித்தது. (அ-எ)

### கண்ணி வெடி-----

(1ம் - பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருந்த கண்ணி வெடி ஒன்று திடீரென வெடித்தது.

இதனால் மேஜர் திலீப் சிங் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் அங்கு மரணமானார்.

காயமடைந்த சிப்பாய் மொகிந்தர்ராவும் யாழ் ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மரணமானார்.

தயாளன் (வயது 30, தமிழ்நாடு) யாழ் ஆஸ்பத்திரியில் கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றார்,

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பங்கஜம் விக்ரம் (வயது 24) என்பவரும் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-10-7)

### பாதுகாப்பு----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மான தொண்டமனாறு ஆலயம் சேதமடைந்தது தனது உள்ளத்தை வருத்துகின்றது என்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

ஆலயத்துக்கு ஏற்பட்ட சேதம் சுமார் 30 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-எ)

### இரத்ததானம் செய்த சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஆக 13

இந்திய இராணுவத்தினர் நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கு பத்தொன்பதரைப் பைந்து இரத்தம் வழங்கினர்

காயமடைந்த இந்திய இராணுவத்தினருக்குச் சிகிச்சையளிப்பதற்கு யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் போதியளவு இரத்தம் இல்லாது இருந்ததன் காரணமாகவே அவர்கள் அவசர அவசரமாக இரத்ததானம் செய்தனர்.

21 இந்திய சிப்பாய்கள் இரத்ததானம் செய்தனர். (உ-10)

### யாழ் ஆஸ்பத்திரியில் தீவிரசிகிச்சை

யாழ்ப்பாணம், ஆக. 13

நேற்று கண்ணிவெடியில் சிக்கி காயமடைந்த இந்திய இராணுவத்தினருக்கு யாழ் ஆஸ்பத்திரி வைத்தியர்கள் தாதிமார், ஊழியர்கள் மிகவும் சுறுசுறுப்புடன் சிகிச்சையளித்தனர்.

நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்கு காயமடைந்த இராணுவத்தினரைக் கொண்டுவந்ததும் அவர்களை உடனடியாக அங்கிருந்து பலாலிக்கு கொண்டு செல்லும் முயற்சிகளை இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

இதை அவதானித்த போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் திரு. எஸ் நச்சினார்க்கினியான் அதை தடுத்து. இங்கு நாம் தீவிரசிகிச்சை செய்வதாக உறுதியளித்தார்.

### கண்ணி வெடி கவனம்!

யாழ்ப்பாணம், ஆக 13

நில்லுங்கள்! உங்கள் கால்கள் பத்திரம்!! கவனித்து நடவுங்கள்!!!

இப்படி தலைப்பிட்ட பிரசுரங்களை நோர்வே செஞ்சிலுவைச் சங்க வேண்டுகோளுக்கு இணங்க யாழ் செஞ்சிலுவைச் சங்கக் கிளை வெளியிட்டுள்ளது.

இந்த பிரசுரத்திற்கான முழுச் செலவையும் நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும்

### நீத்தார் பட்டியல்

## சின்னத்துரை சிவலோகநாதன்

கொழும்புத்துறையைச் சேர்ந்த சின்னத்துரை சிவலோகநாதன் [சீலு] ஆஸ்திரேலியாவில் அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், இல. 165, கொழும்புத்துறையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
குடும்பத்தினர்.

## வல்லிபுரம் சின்னத்தங்கம்

பரந்தனைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னத்தங்கம் காலமானார். இவர் காலம் சென்ற வே. வல்லிபுரம் (உரிமையாளர் ஈஸ்வரன் படமாளிகை) அவர்களின் அன்பு மனைவியும் தங்கராசா, தங்கமணி, லோகநாயகி, பரமேஸ்வரி, பாலசிங்கம், விஜயசமூர்த்தி, தங்கேஸ்வரன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ந. வரதராஜன், நா. இராமலிங்கம், செ. கனகேந்திரன், இராஜேஸ்வரி, சாந்தினி, சுந்தரேஸ்வரி, சத்தியவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்லப்பாவின் அன்புச் சகோதரியும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-8-87 வியாழக்கிழமை பிற்பகல் பரந்தன் இல்லத்தில் நடைபெறும்


நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு

★ உதயன் நடத்தும் ★

## அதிர்ஷ்டப் பயணப் போட்டி-87

### பழநிக்கு இலவசப் பயணம்!

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
உதயன் நடத்தும்
அதிர்ஷ்டப் பயணப் போட்டி



பெயர் ______

முகவரி ______

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?

உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?

சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 2-2-2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி: 13-08-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/3 Navalar Road, Jaffna on Thursday August 13 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org